**செ.வெ. எண்: 534** **நாள்: 11.09.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (11.9.2012) தலைமைச் செயலகத்தில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் 1000 புதிய பேருந்துகள் மற்றும் 379 புதிய வழித்தடங்களைத் துவக்கி வைத்தார்கள். மேலும், ஓய்வு பெற்ற 1574 போக்குவரத்துப் பணியாளர்களுக்கு 32 கோடியே 88 லட்சம் ரூபாய் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையினை வழங்கினார்கள்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, போக்குவரத்து முதுகெலும்பாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் சிறப்பான மற்றும் திறமையான போக்குவரத்து சேவையை பொது மக்களுக்கு அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. சிற்றூர் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்கு தடையின்றி, போக்குவரத்து சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், நாள் ஒன்றுக்கு 2 கோடியே 10 லட்சம் பயணிகள் பயணிக்கின்ற அளவில் 19 ஆயிரத்து 828 பேருந்துகளை இயக்கி வருகின்றன. பொதுமக்களின் தேவைகளுக்கேற்ப தமிழக அரசால் புதிய பேருந்துகள் மற்றும் புதிய வழித்தடங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வகையில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் 1000 புதிய பேருந்துகள் மற்றும் 379 புதிய வழித்தடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

போக்குவரத்துத் தொழிலாளர்களும், பணியாளர்களும் ஊக்கமுடன் தங்களது முழுத் திறனையும் வெளிப்படுத்தி சிறப்பாகப் பணியாற்றி வாழ்வில் வளம் பெற வேண்டும் என்பதற்காக தமிழக அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், போக்குவரத்துத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற 1574 போக்குவரத்துப் பணியாளர்களுக்கு 32 கோடியே 88 லட்சம் ரூபாய் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 11.9.2012